3rd August 1966]

தங்கக் கட்டுப்பாடு விதிகள்

*** 44 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தங்கக் கட்டுப்பாடு சட்டத்திற்குப்பின், 1-10-1964 முதல் வேலை கோரிப் பதிவு செய்த நகைத் தொழிலாளர் எத்தனை பேர் ?

(இ) அவர்களில் எத்தனை பேர் வேலை பெற்றிருக்கிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :

(a) Up to 30th April 1966—831.

(b) 338.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஸார், வேலை பெற்றிருப்பவர் களில், சர்க்கார் நிறுவனங்களில் எத்தனை பேர் ? தனியார் நிறுவனங்களில் எத்தனை பேர் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

*** 45 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தங்கக் கட்டுப்பாடு சட்டத்தின்கீழ் பிறப்பிக்க உத்தேசிக்கப்பட்ட விதிகள் அடங்கிய மத்திய சர்க்கார் விசேஷ கெஜட்டின் (Part II)— செக்ஷன் 3—சப்-செக்ஷன் a (i) தேதி, 7-2-1966) பிரதி இந்த ராஜ்ய அரசாங்கத்திற்குக் கிடைத் துள்ளதா?

(இ) ஆம் எனில், அவ்விதிகளின்மீது ராஜ்ய அரசாங்கம் மத்திய சர்க்காருக்கு ஏதேனும் அபிப்பிராயம் தெரிவித்திருக் கிறதா ?

(உ) அவ்விதிகளின் நகல் ஒன்று மேஜையின்மீது வைக்கப் படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :

(a) Yes, Sir.

(b) Yes, Sir.

(c) As the draft rules have been published by the Government of India, there is no need to place a copy of the draft rules on the table of the House.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஸார், மத்திய சர்க்கார் பிறப் பித்திருக்கக்கூடிய இந்த விதிகளில் ஒரு தனிப்பட்ட தங்க வேலை செய்யும் தொழிலாளி ஏக காலத்தில், ஒரு நேரத்தில் வேலை செய்ய 100 கிராமுக்கு அதிகமாக வைத்துக்கொள்ளக் கூடாது என்று தெளிவாக இருக்கிறதா? தன்னிடத்தில் வைத்துக்கொள்ளக் கூடியது 100 கிராமுக்கு அதிகமாக இருக்கலாம், ஆனல், வேலை செய்ய எடுத்து வைத்துக்கொள்ளுவது 100 கிராமுக்கு மேல் இருக்கக்கூடாது என்று விதியா என்று சொல்ல முடியுமா ?

[3rd August 1966

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப் பற்றி என்னிடம் தகவல் இல்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், இந்தத் தங்கக் கட்டுப்பாடுச் சட்டத்தை அடியோடு ரத்து செய்யும் உத்தேசம் மத்திய சர்க்காருக்கு உண்டா? அதைப் பற்றி ராஜ்ய சர்க்காருக்குத் தகவல் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எனக்குத் தெரிந்த வரையில் இந்தத் தங்கக் கட்டுப்பாடு முறையை மாற்ற இருக்கிறார்கள். அவர்களுடைய முடிவு தெரிந்த பிறகுதான் எந்த அளவுக்கு மாற்றப் போகிறார்கள் என்று தெரிந்துகொள்ளலாம்.

திரு. ஜே. மாதா கவுடர் : தங்கக் கட்டுப்பாடுச் சட்டத்தை மாற்றி அமைக்கும்போது லைஸென்ஸ் கேட்கிறவர்களுக்கு லைஸென்ஸ் கொடுத்து, 22 காரட்டில் நகைகள் செய்துகொள்ளலாம் என்று பத்திரிகைகளில் செய்தி வந்ததே, அதைப் பற்றி நம் அரசாங்கத்தை யோசனை கேட்டார்களா? நம் அரசாங்கம் என்ன யோசனை சொல்லியது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எந்த அளவுக்கு மாற்ற வேண்டுமென்று அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. இறுதி முடிவு என்ன என்பது தெரியவில்லை.

திரு. சா. கணேசன் : சபாநாயகர் அவர்களே, பொற்கொல்லர்களுடைய எண்ணிக்கையும், தங்கக் கட்டுப்பாட்டினால் ஏற்பட்ட கஷ்டமும் தமிழகத்தைப் பொறுத்த வரையில் அதிகமாக இருக்கிற காரணத்தினாலே, இதைத் தமிழக அரசும் நன்றாக உணர்ந்திருக்கிற காரணத்தினாலே, இந்தச் சட்டத்தில் எத்தகைய மாற்றம் வேண்டும், அல்லது முழுவதும் நீக்கப்படவேண்டும் என்பன போன்ற என்னென்ன ஆலோசனைகளை அல்லது கருத்துக்களை மத்திய அரசுக்கு மாநில அரசு தெரிவித்தது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் சற்று முன்பு தான் விடை அளித்தேன். இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்குப் பொற்கொல்லர்களுடைய கஷ்டங்களைத் தவிர்க்க, தவறுதல்களைத் தவிர்க்க எந்தெந்த வகையில் கட்டுப்பாட்டை மாற்றவேண்டும் என்று தெரிவித்திருக்கிறது. எத்தகைய மாற்றம் வேண்டுமென்று தெரிவித்திருக்கிறது என்பதைப்பற்றி தனிக்கேள்வி வேண்டும்.

நெல் வயல்கள் பருத்தி உற்பத்திக்கு மாற்றம்

***46 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து** : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்திலுள்ள மணப்பாறை, மருங்காபுரி, வையம்பட்டி ஆகிய பிளாக்குகளிலுள்ள நெல் விளையும் 7,500 ஏக்கர்கள் பருத்தி உற்பத்திக்காக விவசாய இலாக்காவினரால் மாற்றப்பட்டிருக்கின்றனவா?

(இ) ஆமெனில், காரணம் என்ன?